கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும்
கண்ணாடிகளைச்
சரியாகக் கொடுப்பவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
★ ★ ★
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.



பக்கங்கள்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00



S.M. FERNANDO
Opticians
Sight Tested Prescriptions
Accurately Dispensed
★ ★ ★
580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.



சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 02 புதன்கிழமை (18-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 288


## நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் மூன்று மாதங்களுக்குள் பொதுத் தேர்தல்!

கொழும்பு, செப்: 18

நாடாளுமன்றத்தைக் கலைப்பதாக ஜனாதிபதி பிரகடனம் செய்தால், அந்தப் பிரகடனத்தில்—

மூன்று மாத காலத்திற்குள் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான திகதியையும், புதிய நாடாளுமன்றம் கூடுவதற்கான திகதியையும் அவர் வெளியிட வேண்டும்.

அரசமைப்புச் சட்டத்தின் 70 (1) பிரிவு மற்றும் 70 (5) (அ) ஆகிய பிரிவுகள் இதனை வலியுறுத்துகின்றன.

எனினும் ஏதேனும் காரணங்களுக்காக இந்த மூன்று மாத கால எல்லையை மேலும் மூன்று மாதங்களுக்கு மட்டும் நீடிப்பதற்கான பிரகடனம் ஒன்றை வெளியிடுவதற்கு அரசமைப்பின் 70 (5) (இ) பிரிவு ஜனாதிபதிக்கு அதிகாரத்தை வழங்கியிருக்கிறது.

அத வது—

எப்படியாயினும் நாடாளுமன்றத்தைக் கலைத்த பின்னர் ஆகக் கூடியது ஆறு மாத காலத்திற்குள் பொதுத் தேர்தலை நடத்தி புதிய நாடாளுமன்றைக் கூட்ட வேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்கு உண்டு. [உ]

# நாடாளுமன்றம் எந்நேரமும் கலைக்கப்படலாம்

## தன்னை யாரும் தடுக்க முடியாது என ஜனாதிபதி பிரேமதாஸா அறிவிப்பு

கொழும்பு, செப்டெம்பர் 18

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் பிரகடனத்தை ஜனாதிபதி பிரேமதாஸா எந்நேரமும் வெளியிடலாம் என்று நேற்றிரவு கொழும்பில் எதிர்பார்க்கப்பட்டது.

அதேவேளை நாடாளுமன்றத்தைக் கலைப்பதான தனது முடிவை யாரும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்று ஜனாதிபதி பிரேமதாஸா உறுதிபடக் கூறியிருக்கிறார்.

சபாநாயகர் எம். எச். முகம்மதுவுக்கு எழுதிய பதில் கடிதம் ஒன்றிலேயே ஜனாதிபதி பிரேமதாசா இவ்வாறு உறுதிபடக் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

தமக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படுவதற்கு முன்பே நாடாளுமன்றை இடைநிறுத்தி வைத்து, தம் உத்தரவிட்டு விட்டதால், அந்தப் பிரேரணை காலாவதியாகி விட்டது என சட்டமா அதிபர் தமக்கு ஆலோசனை கூறியுள்ளார் என்றும், அதனால் நாடாளுமன்றைத் தம் கலைப்பதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது என்றும் குறிப்பிட்டு ஜனாதிபதி பிரேமதாஸா சபாநாயகருக்கு கடிதம் எழுதியதும்—

ஆனால் குற்ற விசாரணைப் பிரேரணை அரசமைப்பு சட்ட விதிக்கு உட்பட்டது எனத் தாம் கருதுவதால், அது நாடாளுமன்ற விவாதத்துக்கு

[4-ஆம் பக்கம் பார்க்க]

## 12 படையினர் உயிரிழப்பு

மணலாறு, முல்லைத்தீவுப் பகுதிகளில் கடந்த இரு தினங்களில் மட்டும் 12 படையினர் கொல்லப்பட்டனர்; 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இதேவேளை—

தற்பொழுது நாளுக்கு நாள் சண்டை தீவிரமாகிக் கொண்டிருக்கிறது என்றும்—

புலிகள் கடுமையான முறையில் தாக்குதலை நடத்தி வருவதால், அவர்களின் நிலைகளைப் பிடிப்பது சுலபமல்ல என்றும் இராணுவப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

இதனிடையில் மணலாறுப் பகுதிக்கு மேலதிகமாக பெரும் எண்ணிக்கையான ஸ்ரீலங்காப் படையினர் கடந்த இரு தினங்களில் அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர்.

முச்சந்தி முரளி



உவர்... அத்துலத்தாரின்ரை வாயிலை உந்தளவு காலமும் கொழுக்கட்டையே இருந்தது......?

## தையிட்டியில் சிக்கியுள்ள 20 பேர் நாளை விடுவிப்பு?

யாழ்ப்பாணம், செப். 18

காங்கேசன்துறை, தையிட்டிப் பகுதியில் இராணுவம் நிலை கொண்டுள்ள இடங்களில் சிக்கியுள்ள பொதுமக்களில் சிலரை அங்கிருந்து மீட்டுக் கொண்டு வருவதற்கான முயற்சியில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இராணுவத்தின் பிடியில் உள்ள 20 பேர் அநேகமாக நாளை விடுவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. [ஓ-5]

## காஞ்சிபுரத்தில் எண்மர் கைது

சென்னை, செப். 18

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கூட்டங்களை நடத்த முயற்சித்தனர் என்ற குற்றச் சாட்டுத் தொடர்பாக காஞ்சிபுரத்தில் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டனர்.

காஞ்சிபுரம் பகுதியில் ஆதரவுக் கூட்டங்களை நடத்த அனுமதி கோரி அவர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்களை பொலீஸார் நிராகரித்தனர். [இ-எ]

## சோமா பெரேரா தலைமையிலான தென் இலங்கை தூதுக்குழு அக். முற்பகுதியில் வருகிறது

யாழ்ப்பாணம், செப். 18

இலங்கை மெதடிஸ்த மகா சங்கத்தின் முன்னாள் தலைவர் சோமா பெரேரா தலைமையில் ஆறு பேர் கொண்ட தென்னிலங்கைத் தூதுக்குழு ஒன்று அடுத்த மாதம் முற்பகுதியில் யாழ்ப்பாணம் வர ஏற்பாடாகி இருக்கிறது.

நீதிக்கும், சமாதானத்துக்கும் தெற்கில் குரல் கொடுக்கும் மெதடிஸ்த மகாசங்கப் பொதுச் செயலாளர் டுலிப் பெர்னாண்டோ, மெதடிஸ்த திருச்சபையின் மத்திய மாகாண சபா சங்கத் தலைவர் பிரேமசிறி பெர்னாண்டோ, இலங்கை கிறிஸ்தவ சங்கத்தைச் சேர்ந்த ரிரல்

[3-ஆம் பக்கம் பார்க்க]

## ஓமந்தையில் வெடித்தது "டைம் பொம்" எனத் தகவல்

யாழ்ப்பாணம், செப். 18

நேற்று முன்தினம் காலையில் வவுனியா, தாண்டிக்குளம் அருகே ஓமந்தை மாணிக்கவளவுப் பகுதியில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் வயரால் பின்னப்பட்ட பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த "டைம் பொம்மே" வெடித்ததாகக் கூறப்படுகிறது.

பொதுமக்களும், பயணிகளும் கூடும் இடத்தில் இக்குண்டு வெடித்திருப்பதால் பொதுமக்களை இலக்கு வைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

"டைம் பொம்மில்" பொருத்தப்பட்டிருந்த நேரக் கணிப்புக் கருவியும் மற்றும் குண்டு வைக்கப்பட்டிருந்த

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மணலாறில் நேற்றும் கடுமையான சண்டை

மணலாறு மாவட்டத்தில் நடந்துவரும் யுத்தம், தற்பொழுது உக்கிரமடைந்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று சண்டை மிகக் கடுமையாக இருந்ததாகவும், படையினருக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

ஸ்ரீலங்காப் படையினர் இடைவிடாத விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தும் அதேசமயம், பயங்கர ஷெல் தாக்குதல்களையும் நடத்தி வருகின்றனர்.

கடந்த இரு தினங்களாகப் படையினர் சிறிதும் முன்னேற முடியாது திக்குமுக்காடிய நிலையில் உள்ளனர் என்றும்—

விடுதலைப் புலிகளின் பதில் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன என்றும் தெரியவருகிறது. [ஓ-5-15]

## புலிகளுக்கு பிரேமா ஆயுதம் வழங்கியதை நிரூபிக்க தகுந்த ஆதாரங்கள் உள்ளன

### லலித் பகிரங்க அறிவிப்பு

கொழும்பு, செப். 18

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் விடுதலைப் புலிகளுக்கு, ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா ஆயுத உதவிகளை வழங்கினார் என்பதை நிரூபிக்க தகுந்த ஆவணங்கள் மற்றும் ஆதாரங்கள் தங்களிடம் இருப்பதாக ஐ.தே.கவின் அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிவித்திருக்கிறார்.

நேற்று கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் அவர் இந்த அறிவிப்பை விடுத்தார். அவர் மேலும் கூறியதாவது:-

அன்று பிரேமதாஸா புலிகளுக்கு வழங்கிய ஆயுதங்கள், வாகனங்கள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்கள் இன்று ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகின்றன.

திரு. பிரேமதாஸா அமைச்சரவையுடனோ, நாடாளுமன்றத்துடனோ கலந்தாலோசிக்காமல் தான்தோன்றித்தனமாக ஆயுதங்களை புலிகளுக்கு வழங்கினார். அதிகாரத்தை அவர் தன் எண்ணப்படி துஷ்பிரயோகம் செய்கிறார் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

புலிகளுக்கு பிரேமதாஸா ஆயுத உதவிகளை வழங்கினார் என்ற உண்மையை நாம் வெளியிட்டதைத் தொடர்ந்து, தென்னிலங்கை மக்கள் பிரேமதாஸா மீதான தமது அதிருப்தியை தமது எம். பிக்களிடம் தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர்—என்றார்.

இதே சமயம்—

[3 ஆம் பக்கம் பார்க்க]

## அரசாங்க நாடாளுமன்றக் குழு இன்று கூடுகிறது

கொழும்பு, செப். 18

அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முக்கிய விஷயங்கள் ஆராயப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 'குமாரி' கப்பலில் 270 தபால் பொதி

யாழ்ப்பாணம், செப் 18

'குமாரி' கப்பலில் எடுத்துவரப்பட்ட 270 தபால் பொதிகளும் நேற்று மாலை யாழ். பிரதம தபாலகத்துக்கு எடுத்துவரப்பட்டன.

தபால்களைத் தரம் பிரித்து விநியோகிக்கும் வேலை இன்று முதல் ஆரம்பமாகும் என தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-5-15]

## கச்சதீவை மீட்டெடுகக தற்கொலை படையாக மாற அ. தி. மு. கவினர் தயாராம்!

"கச்சதீவுப் பிரச்சினையில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா எடுக்கும் முடிவுகளுக்கு கட்டுப்பட்டு, எந்த வித தியாகமும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம். கச்சதீவை மீட்க, தேவைப்படும் போது தற்கொலைப் படையாக மாறவும் நாங்கள் தயார்."

தமிழக பட்ஜெட் விவாதத்தில் பேசிய அ. தி. மு. கழக உறுப்பினர் தணிகை பாபு இவ்வாறு கூறினார்.

"தமிழக முதல்வர் ஜெயலலிதா விடுதலைப் புலிகளின் மிரட்டலில் உள்ளார். எனவே அவருக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதிப்படுத்துவது இந்த சட்டமன்றத்தின் கடமையாகும்." — என்றும் அவர் சொன்னார். (உ)

## புலிகள் ஆதரவுக் கூட்டம் நடத்த முயன்ற இருவர் மீது மதுரையில் வழக்கு

சென்னை செப் 18

மதுரை பாண்டியன் விடுதியில் புலிகளுக்கு ஆதரவாகக் கூட்டம் நடத்தியது தொடர்பாக கைது செய்யப்பட்ட "புரட்சிகர இளைஞர் முன்னணி" உறுப்பினர் இருவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புதூர் ஜவஹர் நகரைச் சேர்ந்த ... (60 வயது), ... செல்வம் 30 வயது ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இந்தக் கூட்டம் தொடர்பாக ஏற்கனவே தகவல் தெரிந்திருந்தது என்றும் கூட்டம் இரகசியமாக நடந்ததால் தடுக்க எதுவித நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை என்றும் பொலீஸ் ஆணையாளர் ... தெரிவித்துள்ளார்.

அதேவேளை கைது செய்யப்பட்ட ... வீடு சோதனையிடப்பட்டதாகவும் அங்கிருந்து ... கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## தமிழ் தேசிய ராணுவத்தை அழிக்கவே புலிகளுக்கு அரசு ஆயுதம் வழங்கியது

### புதுடில்லி கூட்டத்தில் தூதுவர் கனகரட்னா தகவல்

இந்தியப் படையினர் இலங்கையில் நிலை கொண்டிருந்த காலத்தில் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய இராணுவத்தை அழிப்பதற்கே விடுதலைப் புலிகளுக்கு இலங்கை அரசால் ஆயுதங்கள் வழங்கப்பட்டன.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் நெவில் கனகரட்னா இப்படிக் கூறினார்.

புதுடில்லியில் ராஜதந்திரிகள் சங்கத்தின் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது;-

விடுதலைப் புலிகளை இலங்கை தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என இலங்கை அரசு கருதவில்லையாயினும், தீவின் இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

புலிகளின் தலைமைப்பீடத்தில் இருந்து இதற்கான பதிலுக்கு நாம் காத்திருக்கிறோம்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தேர்தல்கள் விரைவில் நடத்தப்படும்; அங்கு புலிகள் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றால் முதலமைச்சராக பிரபாகரனைக் தெரிவு செய்யமுடியும்.

இப்படி அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் சில பொருளாதாரக் கொள்கைளே நாட்டின் இனப்பிரச்சினைக்குக் காரணம் என்றும் அவர் கூட்டத்தில் தெரிவித்தார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி-0487)

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. இணுவில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், அண்ணா கோப்பி கடைகளிலும் ஏற்கப்படும். மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/0558)

### மணமகள் தேவை

சிறப்பு அந்தஸ்துள்ள குடி, புகை பழக்கமற்ற இளமைத் தோற்றமுள்ள, 45 வயது மணமாகாத பட்டதாரிக்கு, 35 வயதிற்கு குறைந்த மிக அழகிய, படித்த மணப்பெண் முழு நீளப் புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். சீதனமில்லாதோரும் விண்ணப்பிக்கலாம், அந்தரங்கம் பேணப்படும். தொடர்பு: இல. 815, C/o உதயன். (4298)

### மணமகன் தேவை

யாழ். இந்து கனடாவில் வேலை செய்யும் செவ்வாய்க் குற்றமற்ற 31 வயது B. Sc மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. உடனடியாக Sponsor பண்ணி அனுப்பலாம். மங்கள ஏஜென்ஸி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [18182]

யாழ். இந்து செவ்வாய்க் குற்றமற்ற அரசாங்கத்தில் ரூபா 4000/- பெறும். 30 வயது அழகிய மணப்பெண்ணுக்கு கனடா, அவுஸ்திரேலியா, U.K செல்ல விரும்பும் விவேகமுள்ள மணமகன் தேவை. உடனடியாக Sponsor பண்ணி அனுப்பலாம். மங்கள ஏஜென்ஸி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (18181)

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும்: பியூடோ, 39/17, மின்சார நிலையவீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி/0583)

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்.

5ஆம் ஆண்டு அனுமதி பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை 21-09-1991 சனி பி.ப. 2 00 மணிக்கு நடைபெறும். (பாடங்கள் தமிழ், கணிதம், ஆங்கிலம்).

✱ 19 - 09 - 1991 ற்கு முன் பதிவு செய்யவும்.

- நிர்வாகி.

(சி-0518)

## ஆசிரியர் பற்றாக்குறை

உசன் கொத்தணி அகமப்பிலுள்ள எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் இன்மையால் ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். [இ 117]

## வாழ்த்துமடல்

### துணைவேந்தர் துரைராச வாழியவே!

பாரோர் என்றும் வாழ்த்துமியாழ்ப்
பாணத் தார்பல் கலைக்கழகம்
பல்லாற் றானும் வளர்ந்தோங்கப்
பாடு படுமா திறன்முதல்வ!
பேரா சிரிய ரெல்லோரும்
பெரிது மதித்துப் போற்றுமொரு
பேரா சிரிய! அழகையன்
பேரர் தவச்சீர் பெகமைந்த!
ஊரார் புகழ்நாங் குடுப்பிட்டி
வேரடங் காரும் கல்லூரி
புலகப் படத்திற் றுலங்கவைத்த
ஒப்பில் புகழோய்! துரைராஜ!
சீரார் வளாகத் துணைவேந்தாய்த்
தெரிவா யினைநீ மீண்டுமோர்கால்
சிந்தை மகிழ்ந்தோம் பாராட்டுத்
தெரிவிக் கின்றோம் வாழியவே!

- பழைய மாணவர் சங்கம் -

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

(18175)

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலங்கை

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படும்.

1. ஆங்கிலத்தில் போதனாசிரியர் தரம் III.
2. தற்காலிக உதவி விரிவுரையாளர்.
   - கிறிஸ்தவ நாகரீகம்
   - தொழில் நிர்வாகம்
   - வர்த்தகம்
   - நாடகமும் அரங்கியற்கலைகளும்
   - பொருளியல்
   - ஆங்கில இலக்கியம்
   - கணக்கியல்
   - புவியியல்
   - இந்து நாகரீகம்
   - வரலாறு
   - மெய்யியல்
   - தமிழ்
   - அரசறிவியல்
   - சித்த மருத்துவம்
3. தற்காலிகப் போதனாசிரியர்
   - ஆங்கிலம்
   - கர்நாடக வாய்ப்பாட்டு
   - மிருதங்கம்
   - பரத நாட்டியம்
4. இடைவரவு விரிவுரையாளர்
   - கிறிஸ்தவ நாகரீகம்
   - கணக்கியலும் கணக்காய்வும்
   - வரி விதிப்பு
   - வர்த்தக சட்டம்-தொழிற் சட்டம்
   - சட்டக் கூறுகள்
   - முகாமைத்துவமும்-ஒழுங்கமைப்பு நடத்தையும்
   - சமஸ்கிருதம்
   - நாடகமும் அரங்கக் கலைகளும்
   - பௌதிகப் புவியியல்
   - பிரான்சிய மொழி-(புவியல் மாணவர்களுக்கு)
   - தமிழ்
   - தமிழ் (இந்து நாகரீக மாணவர்களுக்கு)
5. இடைவரவுப் போதனாசிரியர்.
   - கர்நாடக வாய்ப்பாட்டு
   - வீணை
   - வயலின்
   - பரத நாட்டியம்
6. தற்காலிக கட்டுரை ஆசிரியர்.
   - புவியியல் (நிலவளவை அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
   - வரலாறு
7. தற்காலிக செய்முறை காட்டுநர்
   - சித்த மருத்துவம்

ஆங்கிலத்தில் போதனாசிரியர் தரம் III க்கான பதவிக்கு விண்ணப்ப முடிவுத் திகதி 25-10-1991 ஆகும். ஏனைய பதவிகளுக்கு முடிவுத் திகதி 18-10-1991 யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவி பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் இதர விவரங்களையும் பெற விரும்புவர்கள் 23x10 சதமமீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்ட, முத்திரை ஒட்டப்பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

ஆங்கிலத்தில் போதனாசிரியர் தரம் III க்கான பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட அபேட்சார்களின் சிறப்புத் தகைமைகளையும்/அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணக் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

(சி-0550)

உ

விராட் விஸ்வப் பிரமகுல நம

## ருது சோபன அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி ஸ்ரீ புரட்டாதி மீ 6 ஆம் நாள் [22-09-1991] ஞாயிறு மு.ப 10-30 மணிமுதல் 11-30 மணிவரை வரும் சுபவேளையில்

எமது கனிஷ்ட புத்திரி

### ★ செல்வி ஜாமினி ★

அவர்களுக்கு மங்கைப் பருவ மங்கள நீராட்டு விழா நடத்த திருவருள் துணைகொண்டு நிச்சயித்திருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சமேதராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்:
திரு. பொன்னையா நாகராஜாவும்,
துணைவி மகாலஷ்மியும்.

''ராஜ வாசம்''
628/3A, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம். (17918)

## அரசாங்க எழுதுனர் சேவை

### பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 24 - 09 - 1991 — 2.30 மணி

Tuesdays Wednesdays 2.30 — 5.00

விண்ணப்பப் பத்திரங்களை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(Spoken English வகுப்புகளும் நடைபெறுகின்றன.)

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3RD CROSS STREET
(O. L. R. தேவாலய மேற்குப் பக்கம்)
JAFFNA.

[சி-0561]

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 07 — 03 — 1935

உதிர்வு: 18 — 09 — 1990



அமரர்

### சுப்பிரமணியம் சண்முகநாதன்

(B.Sc. S. L. E. A. S)
(கல்வி அதிகாரி, வேலணை)

திதி: 06 - 10 - 1991

நீ இன்று எம்முடனில்லை என்பதை நம்பமுடியவில்லை. நேற்றும், இன்றும், இப்பொழுதும், இக்கணமும் எம்முடன் இருந்து பேசி, மனம் கலந்து உறவு கொண்ட உணர்வே எம்முள் எஞ்சி நிற்கின்றது. மென்பட்டுப் போன்ற உனது ''மனசின்'' லலிதம், இளமுறுவலான வடிவம் பெறும் அழகு, யாவுமே எம் நெஞ்சில் பசுமையான பதிவுகளாய் விட்டன. பிரிந்த பின்னரும் பிரியாத பேருணர்வை நீ ஒருவன் தானே தந்து நிற்கிறாய். நீ தெய்வம் ஐயா! உனது ஆன்ம பலம் எம்மை வழி நடத்தப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், உடன் பிறந்தோர்,
உறவினர்கள், நண்பர்கள்.

91/18, இந்து மகளிர் ஒழுங்கை,
[illegible] [17916]

## முக்கிய அறிவித்தல்

நீண்ட இடைவெளிக்குப் பின் அசல் ஆர்.வி.ஜி. பீடிகள் விற்பனைக்கு வந்துள்ளன. அசல் ஆர்.வி.ஜி. பீடிகள் கூடுதல் பச்சை, நீலம் கலந்த வர்ண பண்டல் கட்டு லேபல்களில் வெளிவருகின்றன.

★ அசல் ஆர். வி. ஜி. பீடிகளில் 12 பீடிகள் கொண்ட கட்டுகள் வெள்ளை லேபல்களில் வெளிவருவதில்லை.

★ போலி பீடிகளை வாங்கி ஏமாறாமல் அசல் ஆர். வி. ஜி. பீடிகளை கேட்டு வாங்குங்கள்.

ஆர். வி. ஜி. நிர்வாகம்.
58, நல்லூர் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

[18174]

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க

## அரசாங்க எழுதுனர் சேவை
## கிராம அலுவலர் (G.S.) சேவை

போட்டிப் பரீட்சைக்கான

### 2ஆவது துரித பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 21 - 09 - 1991 பி.ப. 2 00 மணி

பாடநெறி:

மொழித்தேர்ச்சி, பொது உளச்சார்பு, பொது அறிவு

விண்ணப்பப் படிவங்களை நேரில் பெறலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி 30 - 09 - 1991

★ அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 290/- முழுப்பயிற்சிக்கும்
★ விரிவுரைகள் சனியும், ஞாயிறும்

ASTAN INSTITUTE
101/10, STANLEY ROAD, JAFFNA.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்) (சி-0521)

யாழ், பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகள்

## கலை வர்த்தகக் கல்லூரி,

யாழ்ப்பாணம்,
[வெலிங்டன் சந்திக்கு அருகாமை]

First In Com.
G. A. Q.

ஆரம்பம்: 21 - 09 - 1991
சனி 8-00 மணி

கணக்கியல் — ஸ்ரீ

குறிப்பு: சகல பாடங்களின் விரிவுரைகளும் ஆரம்பமாகின்றன. [இ-0543]

## கலைவர்த்தகக் கல்லூரி

### C.C.A. A/L 92

### பிரிவு III

| | | |
|---|---|---|
| வர்த்தகம் | — | 7. 8 |
| கணக்கியல் | — | 8. 9 |
| பொருளியல் | — | 9.10 |
| இந்துநாகரீகம் | — | 10.11 |
| அளவையியல் | — | 12. 1 |

ஆரம்பம்: 21 - 09 - 1991
மு. ப. 8.00 மணி

குறிப்பு: முழுப்பாடத் திட்டமும் முடிக்கப்படும். [சி-0549]

## கிராம சேவையாளர் எழுதுவினைஞருக்கான போட்டிப்பரீட்சை வகுப்புகள்

நடைபெறுகின்றன

ஆசிரியர்:- திரு. குமாரவேல்

★ அச்சடித்த பாடக்குறிப்புகள் வழங்கப்படும்
★ ஒவ்வொரு வகுப்பு முடிவிலும் மாதிரி பயிற்சிப் பரீட்சை நடைபெறும்.

### புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி/0524)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### யானை பிளந்தது!

தங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட ஆதரவாளர்களைப் பொலிசார் தொந்தரவு செய்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் புரட்சியாளர்களான காமினியும், லலித்தும் குறைபட்டிருக்கிறார்கள்.

விசாரணை நடத்துவதாகக் கூறி, இரவு நேரங்களில் சென்று, இரகசியப் பொலிசார் பெரும் அடாத்தாக நடக்கின்றனர். எங்கள் ஆதரவாளர்களைத் தாக்குகிறார்கள் — என்றும் அவர்கள் முறைப்பட்டிருக்கிறார்கள்.

தென்னிலங்கையில் மக்கள் அரசாங்கம் இயங்கவில்லை. பொலிஸ் ஆட்சியே செயற்படுகிறது என்றும் அவர்கள் குற்றம் சாட்டி உள்ளார்கள். கண்டித்துள்ளார்கள்.

கடந்த 14 வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒட்டிக் கொண்டிருந்த வரைக்கும், இந்த நாட்டில் பொலிஸ், இராணுவ ஆட்சி நடப்பதை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. தமது ஆதரவாளர்கள் மீது அம்பு வந்து தைக்கும் போது தான் அதனைப் புரிந்து கொள்ளுகிறார்கள்!

எழுபதுகளின் முற்பகுதியில் தமிழ் மக்களது வீடுகளிலும் இரவு நேர விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. இளைஞர்களைத் தேடி வருவதாகக் கூறி, வீட்டில் இருந்த சகலரும் தொந்தரவு செய்யப்பட்டார்கள். தாக்கப்பட்டார்கள்; இம்சைப்படுத்தப்பட்டார்கள்.

அந்த ஆரம்பம், கண்ட நேரத்திலும் கைது, விசாரணை இன்றிக் கைது, விசாரணைக்கெனக் கூட்டிச் சென்று காணாமற் போக்குதல், தடுப்புக் காவலில் கொடூரச் சித்திரவதை, மனித உரிமை மீறல், காரணம் கூறாது நீண்ட காலத்துக்கு தடுத்து வைத்தல், கொலை செய்து விட்டு மரண விசாரணை இன்றியே தகனம் செய்தல் என்று படிப்படியாகப் பலப்பலவாக விரிந்து தமிழர்கள் அடக்குமுறை ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

தமிழர்களின் உரிமைகளை பொலிசும், இராணுவமும் ஏனைய படைகளும் எவ்வாறும், எந்தளவுக்கும் பறிக்கலாம், அத்துமீறலாம் என்று தாராள அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அவற்றை எல்லாம் சட்டரீதியாக்குவதற்கென்று பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் இயற்றப்பட்டது.

இப்போது பொலிஸ் ஆட்சி குறித்து முறைபாடு செய்யும், புலம்பும் அத்துலத்முதலி, பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது தமிழர்கள் மீது தாம் கட்டவிழ்த்துவிட்ட அடக்குமுறைகளை, அத்துமீறல்களை, அட்டூழியங்களை இப்போது சற்று இரைமீட்டுப் பார்த்தால் நல்லது.

தமிழர்களுக்குச் செய்த அட்டூழியங்களின் விளைவை ஐக்கிய தேசியக் கட்சியும் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இந்த நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை கொண்ட ஒரேயொரு கட்சி என்றும், தொடர்ந்து ஆட்சி செய்யக்கூடிய, மக்கள் பலம் உடைய கட்சி என்றும் ஐ.தே.க. இறுமாப்பு அடைந்திருந்தது. பெருமை பேசிவந்தது. தனது சின்னமான யானையைப் போலவே அசைக்க முடியாதது என்று தலைக்கனம் கொண்டிருந்தது. ஆனால் இப்போது... யானை பிளந்தது போல இரண்டுபட்டு விட்டது! இனிமேல் அது கால் வேறு கை வேறாக உருக்குலைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எல்லாம் 29 வருடங்களாகத் தமிழர்களுக்குச் செய்த கொடுமைகளின் கூட்டு மொத்தப் பாவவினையே!

### நிதர்சனம் செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 18

திரைப்பட அரங்கு, வீடியோ பட அரங்கு உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நிதர்சனம் செயலகத்தில் நடைபெறும்.

இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிதர்சனம் பொறுப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ)

### கலை பண்பாட்டுக் கழக கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 18

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக தலைமைச் செயலகத்தில் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் கலந்துரையாடல்கள் நடைபெற உள்ளன.

கோண்டாவிலில் உள்ள கழக கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல்கள் நடைபெறும்.

இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தமிழீழ நாடகக் கல்லூரி அமைப்பது பற்றியும்—

நாளை வியாழன் பிற்பகல் 3 மணிக்கு தமிழீழ ஓவிய சிற்பக் கல்லூரி உருவாக்குதல் பற்றியும்—

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தனித்தமிழை வழக்கத்திற்குக் கொண்டு வருதல் பற்றியும் கலந்துரையாடல்கள் அமர்வுகளாக இடம்பெறும்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடல்களில், அவ்வத்துறை சார்ந்த அறிஞர்களையும், ஆர்வலர்களையும் தவறாது கலந்து கொண்டு கருத்துக்களை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ)

### மானிப்பாய் இலங்கை வங்கி சிறப்பு விழா

வட பிராந்திய இலங்கை வங்கிக் கிளைகளில் முதன்மைக் கிளையாக மானிப்பாய் இலங்கை வங்கி தெரிவு செய்யப்பட்டது தொடர்பான சிறப்பு விழா எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு மானிப்பாய் இலங்கை வங்கிக் கட்டடத்தில் நடைபெறும்.

மானிப்பாய் இலங்கை வங்கி முகாமையாளர் திரு. செ. ந. நவரத்தினராஜா விழாவுக்குத் தலைமை வகிப்பார். யாழ். பிரதேச முகாமையாளர். திரு. க. கணேசமூர்த்தியும் பாரியாரும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்கள். (இ)

### வீரமரணம்

மணலாறு மாவட்டத்தில் நடந்துவரும் மோதலில் நேற்று வீரவேங்கை லோறன்ஸ் (முருகேசு கஜேந்திரன் — புத்தூர்) வீரமரணமடைந்தார்.

இதேசமயம், கடந்த ஞாயிறன்று நடந்த சண்டையில் காயமடைந்த சுரேஸ் (சந்திரசேகரம் ஜெயக்குமார் — கன்னாகம்) என்ற போராளியும் நேற்று வீரமரணமடைந்தார்.

### புலிகளுக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லலித் அத்துலத்முதலி தெரிவித்த இக்குற்றச்சாட்டு குறித்து ஜனாதிபதி பிரேமதாஸா பதில் ஏதும் சொல்லாமல் மௌனம் சாதித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# மைசூரில் பல கட்டடங்களை தகர்க்க புலிகள் முயற்சியாம்!

## பயமுறுத்தலை அடுத்து தீவிர பாதுகாப்பு

மைசூர், செப். 18

மைசூரில் அடுத்த மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகும் பதினொரு நாள் தசரா பண்டிகையை ஒட்டி பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மைசூர் அரண்மனையையும் ஏனைய அரசுக் கட்டடங்களையும் குண்டு வைத்துத் தகர்க்கப் போவதாக விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் என்று சந்தேகிக்கப்படுவோர் விடுத்துள்ள மிரட்டல்களை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மைசூர் நகர பொலீஸ் ஆணையாளர் திரு. பாஸ்கர் தெரிவித்தார்.

மைசூர் அரண்மனையைக் குண்டு வைத்துத் தகர்க்கப் போவதாகக் கிடைத்த பயமுறுத்தலைத் தொடர்ந்து, ஐந்து சந்தேக நபர்கள் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் திரு. பாஸ்கர் சொன்னார்.

ஐந்து அரச அதிகாரிகளுக்குப் பயமுறுத்தல் கடிதங்கள் கிடைத்துள்ளன. பொலீஸ் உதவி ஆணையாளர் ஒருவர் தொலைபேசி மூலம் பயமுறுத்தப்பட்டிருக்கிறார். மிரட்டல் கடிதங்கள் அனைத்தும் கையெழுத்து நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. மைசூர் அரண்மனையைச் சுற்றி பாதுகாப்பு வலயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை — தசரா பண்டிகைக்கு விசேட விருந்தினர்கள் எவரையும் அழைப்பதில்லை என்று கர்நாடக முதலமைச்சர் தீர்மானித்திருக்கிறார்.

பாதுகாப்பு பிரச்சினை கருதி இம் முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## திலீபன் அஞ்சலி கூட்டங்கள்

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு, யாழ். குடாநாடு எங்கும் ஏற்பாடு செய்திருக்கும் தொடர் அஞ்சலிக் கூட்டங்களின் வரிசையில் இன்று 18 ஆம் திகதி பின்வரும் இடங்களில் கூட்டங்கள் நடைபெறும்.

★ வலிகாமம் பிரதேசத்துக்குரிய கூட்டம் சங்கானை வட்டு. இந்துக் கல்லூரியில் — இரவு 7 மணிக்கு.

★ தீவகப் பிரதேசத்துக்குரிய கூட்டம் வேலணை துறையூர் சனசமூக நிலையத்தில் — இரவு 6-30 மணிக்கு.

★ வடமராட்சி பிரதேசத்துக்குரிய கூட்டங்கள், கற்கோவளம் சந்தையடியில் — முற்பகல் 10 மணிக்கும், வல்வெட்டித்துறை அ. த. க. பாடசாலையில் — பிற்பகல் 4 மணிக்கும்.

★ தென்மராட்சி பிரதேசத்துக்குரிய கூட்டம், கைதடி நவீல்ட் பாடசாலையில் — இரவு 7 மணிக்கு. [இ-5]

## திலீபன் நினைவு ஊர்தி பவனி

யாழ்ப்பாணம், செப். 18

திலீபனின் உருவப்படத்தைத் தாங்கிய—போர்க்கால வடிவங்களைச் சித்திரிக்கும் எழுச்சி ஊர்தி ஒன்று யாழ் மாவட்டத்தில் பவனி வந்து கொண்டிருக்கிறது.

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவை முன்னிட்டு மக்கள் உறவு. கொள்கை முன்னெடுப்புப் பிரிவினரால் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஊர்தி பவனி வருகின்ற வீதிகளில் மக்கள் தமது வீடுகளின் முன்பாக விளக்கு ஏற்றி தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தி வருகிறார்கள். (இ-5)

## புதுக்குடியிருப்பில் தினமும் அஞ்சலிக் கூட்டங்கள்

புதுக்குடியிருப்பு, செப். 18

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவை முன்னிட்டு புதுக்குடியிருப்பு பிரதேச மட்டத்தில் சுழற்சி முறை உண்ணாவிரதமும், அஞ்சலிக் கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

இன்று 18 ஆம் திகதி இரணைப்பாலையிலும், நாளை 19 ஆம் திகதி ஆனந்தபுரத்திலும், 20 ஆம் திகதி சிவன் நகரிலும், 21 ஆம் திகதி வள்ளிபுரத்திலும், 22 ஆம் திகதி தேவிபுரத்திலும், 23 ஆம் திகதி புதுக்குடியிருப்பு மத்தியிலும், 24 ஆம் திகதி றெட்பானாவிலும், 25 ஆம் திகதி விஸ்வமடு கிழக்கிலும், 26 ஆம் திகதி உடையார்கட்டிலும் மேற்படி நிகழ்ச்சிகள் இடம்பெறும். [இ 5-126]

### அன்னை பூபதி நினைவு

## பொது அறிவுப் போட்டி: வெள்ளி பரிசளிப்பு விழா

அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுப் போட்டித் தேர்வுப் பரிசளிப்பு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி நடந்த இந்தப் போட்டியில் 16 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள், பங்குபற்றி இருந்தனர்.

இவர்களில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள், பாடசாலை ரீதியாக சித்தி அடைந்ததற்கான சான்றிதழ்களைப் பெறவுள்ளனர்.

கொத்தணி மற்றும் மாவட்ட ரீதியாக முதலாம் இடத்தைப்பெற்ற மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு மாணவர்களுக்கான பரிசுகளும், சான்றிதழ்களும் பரிசளிப்பு விழவில் வழங்கப்பட இருக்கின்றன.

பரிசு பெறவிருக்கும் மாணவர்களை விழவுக்கு அழைத்துவர கொத்தணி அதிபர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் தங்களால் முடிந்த உதவிகளை வழங்குமாறு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ)

### தியாகத்தேன்: 4

பாண்போட வந்தவர்கள்
வீணாக நம்மினத்தை
வாட்டுவது கண்டு
ஊண் இன்றிப் போராட - தமிழ்த்
தூண் ஒன்று கிளம்பியது
அவன் தான் ..... திலீபன்!

— வாஞ்சிநாதன்

(தியாகி திலீபனின் நினைவாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிர்வாணமாக ஓடிய

## 17 இலங்கையரும் விரைவில் நாடு கடத்தப்படுவார்கள்

### கோஸ்ராறிக்கா அரசு முடிவு

சன்ஜெஸி, செப். 18

தாம் நாடு கடத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக கோஸ்ராறிக்கா விமான நிலையத்தில் முழு நிர்வாணமாக ஓடிய 17 இலங்கையரும் தற்போது விமான நிலையத்தில் பயணிகள் தங்கும் அறையில் பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளனர். அடுத்த சில தினங்களுக்குள் இவர்கள் நாடு கடத்தப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த 17 இலங்கையர்களையும் நாடுகடத்துவதற்கு சட்டபூர்வமான அதிகாரம் தங்களிடம் உண்டு என்றும் விமானக் கம்பெனி இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காது என்று நம்புவதாகவும் கோஸ்ராறிக்கா உள்துறை அமைச்சர் லூயிஸ் பிஸ்மான் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இவர்கள் கே. எல். எம். விமானத்தில் ஏற்றப்பட்டு அம்ஸ்ரடாமுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்றும் அமைச்சர் கூறினார்.

தேவையான பிரயாண தஸ்தாவேஜுக்கள் இன்றி இந்த 17 இலங்கையரும் கோஸ்ராறிக்காவில் இருந்து நிக்கரகுவாவுக்குள் நுழைய முயன்ற போது மானாகுவாவில் கைது செய்யப்பட்டதும் —

ஹோட்டல் ஒன்றில் தங்க வைக்கப்பட்ட பின் கடந்த வாரம் விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்ட போது தாம் அணிந்திருந்த துவாய்களைக் கழற்றி வீசிவிட்டு இவர்கள் நிர்வாணமாக ஓடியதும் தெரிந்தவையே. [இ]

### தென் இலங்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெர்னாண்டோ ஆகியோரும் மற்றும் இரு பிரிட்டிஷ் பிரசைகளும் இக் குழுவில் இடம் பெறும் ஏனைய அங்கத்தவர்கள் என்று தெரியவருகிறது.

சோமா பெரேரா தலைமையிலான குழுவினர் வடக்கு—கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியாக ஏற்கெனவே அரசாங்கத் தரப்பினரையும் எதிர்க்கட்சி தரப்பினரையும் சந்தித்து பல தடவைகள் பேச்சு வார்த்தை நடத்தி உள்ளனர்.

இவர்கள் தமது வடபகுதி விஜயத்தின் போது விடுதலைப் புலிகள் தலைவர்களையும் சந்திக்க உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாதுக் குழுவினர் மூன்று மாதங்களுக்கு முன்னரே யாழ்ப்பாணம் வர ஏற்பாடாகி இருந்தது என்றும்—

ஆனையிறவு யுத்தம் காரணமாக இவர்களின் யாழ். வருகை தாமதமாகியது என்றும் இவர்களது வருகைக்கான ஏற்பாடுகளை இங்கு செய்து வரும் மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக் குரு வண. கே. பி. கோவிந்தராஜ் தெரிவித்தார். [இ]

### இன்று அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 18

மணலாறுப் பகுதியில் நடந்து வரும் போரில் நேற்று முன் தினம் (திங்கள்) வீரமரணமடைந்த வேங்கைகளின் புகழுடல்கள் இன்று குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

வலிகாமத்தில்—கன்னாகம் சந்தை மைதானத்திலும், தென்மராட்சியில்—மட்டுவில் மகா வித்தியாலயத்திலும், வடமராட்சியில்—நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடைகளில் புகழுடல்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதியில் மாவீரர்களின் சொந்த இடங்களிலுள்ள மாவீரர் மயானங்களில் தானம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஒ]

### தேசிய கல்லூரியாக பம்பலப்பிட்டி இந்து

கொழும்பு, செப். 18

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி தேசியக் கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டிருக்கிறது.

தேசியக் கல்லூரியாக தரமுயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அக் கல்லூரியின் அபிவிருத்தி சபை கல்வி அமைச்சுக்கு விடுத்திருந்தது. (இ-எ)

### ஓமந்தையில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பை சிதைந்து போன நிலையில் உடைகளுடனும் மீட்கப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

குண்டு வெடிப்பினால் பயணிகள் கூடும் கட்டடம் சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமுற்ற பதினொரு பொதுமக்களில் பத்துப் பேரின் பெயர், விவரங்கள் கிடைத்துள்ளன. அவை வருமாறு:-

சண்முகம் பேரின்பம் (வயது 40 —பருத்தித்துறை), கலியுகவரதன் (வயது 20 —பருத்தித்துறை), ரவீந்திரன் (வயது 30 — பருத்தித்துறை), சின்னத்தம்பி அமிர்தலிங்கம் (வயது 16 — தொண்டமானாறு). சின்னராசா செல்லலட்சுமி (வயது 38 —பண்டத்தரிப்பு), சண்முகலிங்கம் (வயது 47 — மயிலங்காடு), மகாலிங்கம் றோசம்மா (வயது 38 — வவுனியா), நடராசா (வயது 30 — கன்னாகம்), கதிரமலை (நல்லூர்), ஆறுமுகம் இராஜேஸ்வரி (வயது 31 — வவுனியா) ஆகியோரே அந்தப் பத்துப் பேருமாவர். [உ]

## வேட்டியின்றி சட்டசபையில் தி. மு. கழக உறுப்பினர்!

சென்னை, செப். 18

தி. மு. கழக எம். எல். ஏ. யான பரிதி இளம்வழுதியின் வேட்டி சட்டசபையில் அவிழ்த்து விடப்பட்டது.

கடந்த வாரம் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக சென்னை பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த 9 ஆம் திகதி சட்டசபையில் பட்ஜெட் விவாதத்தின் போது—

சபாநாயகரின் உத்தரவையும் மீறிப் பேசியதற்காக பரிதி இளம்வழுதியை சட்டசபையை விட்டு வெளியேறுமாறு சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா உத்தரவிட்டார்.

அவர் வெளியேற மறுத்தார். இதனை அடுத்து அவரை சபையில் இருந்து வெளியேற்றுமாறு சபைக் காவலர்களுக்கு சபாநாயகர் உத்தரவிட்டார்.

பரிதி இளம்வழுதி வெளியேற முரண்டு பிடித்ததை அடுத்து, சபைக் காவலர்கள் அவரைக் குண்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டு வெளியே சென்றனர்.

அப்போது அவரின் வேட்டி சட்டசபைக்குள் கீழே கிடந்தது. அதனை சபைக் காவலர் ஒருவர் எடுத்துச் சென்று பரிதி இளம்வழுதியிடம் கொடுத்தார். உள் அங்கி [ஜட்டி], சட்டையுடன் நின்ற அவர் வேட்டியை வாங்கி அணிந்து கொண்டார்.

சபையிலிருந்து வெளியேற்றப்பட்ட பரிதி இளம்வழுதி சட்டசபை ''லொபி''யில் நின்றபடி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

''சட்டசபையில் பெரும்பான்மையை வைத்து என்னை வெளியேற்றி விட்டார்கள். இதை மக்கள் ஆதரிக்க மாட்டார்கள்.

எனது வேட்டியை ஓர் உறுப்பினர் அவிழ்த்து விட்டார். அரை நிர்வாணமாக நான் வெளியே வந்தேன். ஓர் உறுப்பினர் எனது வயிற்றில் ஓங்கிக் குத்திவிட்டார்— என்றார். [உ]

## சிவாஜி தலைமையில் ஆர்ப்பாட்டப் பேரணி

தஞ்சாவூர், செப் 18

ஜனதா தள் கட்சியின் தமிழ்நாடு தலைவர் திரு. சிவாஜி கணேசன் தலைமையில் கடந்த 9 ஆம் திகதி தஞ்சாவூரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

உரவிலை உயர்வை கண்டித்தும், மண்டல கமிஷன் சிபாரிசை அமுல் நடத்துமாறு கோரியும் பேரணி நடத்தப்பட்டது.

பேரணியில் பெரும் எண்ணிக்கையான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## சபாநாயகர் சுதந்திரமாக செயல்பட அதிகாரம் உண்டு

கொழும்பு, செப் 18

ஜனாதிபதிக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள அரசியல் குற்றப் பிரேரணை தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டிருக்க வேண்டும் என்ற கட்டப்பாடு சபாநாயகருக்கு இல்லை. அவசியமானால் மட்டும் அவர் சட்டமா அதிபரிடம் ஆலோசனையைக் கேட்கலாம். அப்படி அவர் கேட்டால் மட்டுமே சட்டமா அதிபரும் ஆலோசனை வழங்கலாம்.

இப்படிக் கூறியுள்ளார் முன்னாள் சபாநாயகர் திரு. ஸ்ரான்லி திலகரத்தின.

அரசியல் அமைப்பின்படி நாடாளுமன்றமானது அதி உயர் சட்டவாக்கப்பீடமாகத் திகழ்கிறது. அதன் நீதிபதியாக சபாநாயகர் திகழ்கிறார். எனவே சுதந்திரமாகவும், சுயேச்சையாகவும் செயல்பட அவருக்கு போதிய அதிகாரங்கள் உண்டு — என்றும் சொன்னார்.

## நடிகை ராதா திருமணம்

கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் கடந்த 9 ஆம் திகதி நடிகை ராதாவின் திருமணம் நடைபெற்றது. மணமகன் கேரளத்தைச் சேர்ந்த ராஜசேகரன் நாயர். இவர் பம்பாயில் தொழில் அதிபராக இருக்கிறார். [ஒ]

## ரயிலில் வரும் சைக்கிள்

தினமும் 35 புதிய சைக்கிள்கள் ரயில் மூலம் கொழும்பில் இருந்து வடபகுதிக்கு செல்கின்றன என்று கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. (இ-எ)

### திருத்தம்

17-9-91 உதயன் பத்திரிகையில் பிரசுரமான ''வெளிவாரிப் பட்டப் படிப்பு'' (இல.சி/0525) என்னும் விளம்பரத்தில் யாழ். பல்கலைக்கழகத்திற்கான விரிவுரைகள் என்பதற்குப் பதிலாக யாழ் பல்கலைக்கழகம் இதற்கான விரிவுரைகள் எனத் தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

நிர்வாகி
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(C/0546)

## சந்தி வெளி மின்கம்பத்தில் சடலங்கள்

கொழும்பு, செப். 18

மட்டக்களப்பு மாவட்டத்தில் முறக்கொட்டாஞ்சேனை மற்றும் சந்திவெளி ஆகிய பகுதிகளில் மின்கம்பங்களில் மூன்று பேரின் சடலங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன.

இப்படி கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்த நான்காவது நபர் அவசர வைத்திய சிகிச்சைக்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [இ-எ]

## புலிகளின் செயற்பாடு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

### அமைச்சர் பவார் கூறுகிறார்

புதுடில்லி, செப். 18

தமிழகக் கடலோரப் பகுதிக்கு அப்பாலிருந்து விடுதலைப் புலிகள் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் படிப்படியாகக் கட்டுப்படுத்தப்பட்டு, குறைக்கப்பட்டு வருகின்றன.

மத்திய பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் நேற்று இப்படித் தெரிவித்தார்.

தமிழக அதிகாரிகளின் வலுவான ஆதரவினாலும், பாதுகாப்புப் படையினரின் இடைவிடாத கண்காணிப்பு நடவடிக்கையின் பலனாகவும் அது சாத்தியமாயிற்று என்றும் அவர் சொன்னார்.

இதற்கிடையில்—

சிதம்பரனார் மாவட்டக் கடலோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் ஊடுருவலைத் தடுப்பதற்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக அம்மாவட்ட ஆட்சித் தலைவர் அன்வர் அலி தெரிவித்தார்.

இருபது கடலோரக் கிராமங்களில் பொதுமக்களின் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி கடலோரக் காவல் படை நிலையத்தின் கீழ் இயங்கும் கடலோரக் காவல் படைக் கப்பல் ஒன்றும், படகுகளை வழிமறித்துச் சோதனையிடும் கலங்கள் இரண்டும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கின்றன.—இப்படி அவர் மேலும் கூறினார். (உ-எ)

## பிரபாகரனை நாடு கடத்துமாறு இந்தியா கேட்கவில்லையாம்!

### ராஜ்ய சபையில் தெரிவிப்பு

புதுடில்லி, செப். 18

விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நாடு கடத்துமாறு இலங்கையைக் கோரும் யோசனை எதுவும் இந்தியாவிடம் தற்போதைக்கு இல்லை.

இப்படிக் கூறினார் இந்திய வெளியுறவு இணை அமைச்சர் எட்வார்டோ பெலாரோ.

இந்திய மேல் சபையான ராஜ்ய சபையில் கேள்வி நேரத்தின் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

பிரபாகரனை நாடு கடத்துமாறு இலங்கையைக் கோர வேண்டும் என்ற யோசனை எதுவும் இந்திய மத்திய உள்துறை அமைச்சிடம் இருந்து வரவில்லை. உள்துறை அமைச்சு அத்தகைய யோசனையை முன் வைத்தால் மாத்திரமே எமது அமைச்சு அது குறித்து பரிசீலிக்கும்— என்றார்.

புலிகளால் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலைச் சமாளிக்க இந்திய அரசுக்கு எந்த நாட்டினதும் உதவியும் தேவையில்லை. எம்மால் நிலைமையை திறமையாகச் சமாளிக்க முடியும் என்றும் அவர் கூறினார். (இ-3)

## நாடாளுமன்றம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது என்றும், அதனால் அது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும்வரை ஜனாதிபதி நாடாளுமன்றைக் கலைக்க முடியாது என்று அரசமைப்பு திட்டவட்டமாக கூறுகிறது என்றும் சபாநாயகர் ஜனாதிபதிக்கு பதில் கடிதம் எழுதியதும் தெரிந்தவையே.

சபாநாயகரின் இக்கடிதத்துக்கு ஜனாதிபதி பிரேமதாஸ திரும்பவும் பதில் கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார்.

அந்தக் கடிதத்திலேயே தாம் நாடாளுமன்றைக் கலைப்பதை யாரும் தடுக்க முடியாது என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இதற்கிடையில்—

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் பிரகடனத்தை ஜனாதிபதி நேற்று மாலை வெளியிடலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்டது.

நேற்று மாலைப் பொழுது சுப நேரம் என சோதிடர்கள் கூறியிருப்பதால் அந்த வேளையில் நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு உத்தரவிடும் பிரகடனத்தில் ஜனாதிபதி கையெழுத்திடக் கூடும் என்று அவருக்கு எதிரான எம். பிக்கள் சிலர் கூறியுள்ளனர்.

நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதி முயற்சித்து வருவது அவர் எவ்வளவு தூரம் விரக்தியடைந்திருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டுகிறது என்று முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியிருக்கிறார்.

நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்தால் அதனை ஆட்சேபித்து தாங்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்போவதாக ஜனாதிபதிக்கு எதிரான எம். பிக்கள் சிலர் கூறியுள்ளனர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமி[illegible] 392/2 இலக்கத்தில் [illegible] 18-09-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திரு. சு. நல்லையா

சாவகச்சேரியைச் சேர்ந்தவரும், அளவெட்டியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சுப்பிரமணியம் நல்லையா (இளைப்பாறிய அதிபர்) காலமானார். இவர் காலஞ்சென்ற நேசமணியின் அன்புக் கணவரும், ஜெய்சிங் (பட்டயக் கணக்காளர், லண்டன்), சுலோஜினி (அரசாங்க திரைப்படக் கூட்டுத்தாபனம், கொழும்பு), ரஞ்சினி (நியூசிலாந்து), இரவீந்திரன் (அரசாங்க மரக் கூட்டுஸ்தாபனம், யாழ்ப்பாணம்.), சாந்தினி (புத்தளம்), காலஞ்சென்ற வினோதினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி ஜெய்சிங் [லண்டன்], திருமதி இரவீந்திரன் மங்கையர்க்கரசி, திரு. யேக்கப் (கொழும்பு), யோகதாசன் [நியூசிலாந்து], எட்வேட் (நீர்ப்பாசன இலாகா, புத்தளம்.), ஜெயம் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயந்திரன் (உலக வர்த்தக ஸ்தாபனம், லண்டன்.), டில்ருக்ஷி (கொழும்பு), ஜெனீற்ரா, ஜெருஷன் [நியூசிலாந்து] பிருந்தா, இளங்கோ (கொழும்பு றோயல் கல்லூரி), சுபாஷினி, ஜெயக்குமார், சந்திரகுமார் (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று [18 - 9 - 91] நண்பகல் 12 மணிக்கு அளவெட்டி தெற்கு மயானத்திற்கு நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. இரவீந்திரன்

(17920)

### பண்டிதர் சு. இராமசாமி

(இளைப்பாறிய அதிபர்)

இடைக்காட்டைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர், பண்டிதர் சு. இராமசாமி அவர்கள் நேற்று (17-9-91) இல் காலமானார். இவர் இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், Dr. ஸ்ரீசண்முகநாதன் (R.M.P வேரவில்), குமாரதாசன் (மருந்தாளர், மந்திகை), சிவகாமசுந்தரி, கந்தசுவாமி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாதசுந்தரம் (சிவில் பொறியியலாளர், கொழும்பு), பாலசரஸ்வதி, யோகேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் அருமை மாமனாரும், பாலகுமார் (U.K), பாலகணேஸ் (நோர்வே), மைதிலி, ஸ்ரீபாலன் (ஹொலண்ட்), ஜனகன், ஜமுனா, செந்தூரன், சுகிர்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (18 - 9 - 91) முற்பகல் 11.00 மணியளவில் இடைக்காட்டில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. ஸ்ரீசண்முகநாதன்

(17921)

### சிற்றம்பலம் இராசரத்தினம் செட்டியார்

சிற்றம்பலம் இராசரத்தினம் செட்டியார் (இளைப்பாறிய மராமத்து திணைக்கள உத்தியோகத்தர்) அமரரானார். இவர் சிவயோகநாயகியின் அன்புக் கணவரும், அமரர் தியாகலிங்கம், சண்முகலிங்கம் (அஞ்சல் அதிபர், நெடுந்தீவு), சாரதாம்பாள், கமலாம்பாள், கணேசலிங்கம் (கனடா), மகேசலிங்கம் (பிரான்ஸ்), ஜெகதாம்பாள் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருவருட்செல்வன் (கொலட்ஸ் லிமிடெட்), சிவராசா (புகைப்பட நிலைய உரிமையாளர்), சித்திரகலா, டாக்டர் உமாகாந்தன் (உரிமையாளர், நாவன்மார்கட்டு ஆஸ்பத்திரி), அன்னலட்சுமி (இளைப்பாறிய மருத்துவ தாதி), நளாயினி, சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன், அபிராமி, பிரணவன், துர்க்கா, தர்மினி, அபர்ணா, அசோக், லக்ஷ்மன், சிராணி, மயூரி, பிரகாஷ், ஷகிலா, போதரன், அனுஷன், கிரிசிகேசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-9-91 புதன்கிழமை இன்று பிற்பகல் 2 மணியளவில் செட்டியா மடம், வட்டுக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. சண்முகலிங்கம்
(மகன்)

(17922)

### அறிவித்தல்

சகல திரைப்பட அரங்கு, வீடியோ பட அரங்கு உரிமையாளர்களையும், முகாமையாளர்களையும் நாளை 1991-09-19 (வியாழன்) காலை 10 மணிக்கு நிதர்சனம் செயலகத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

குறித்த நேரத்தில் கலந்துரையாடல் ஆரம்பமாகும்.

பொறுப்பாளர்,
நிதர்சனம்,
திருநெல்வேலி.

(சி-0564)

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L) வகுப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

Dec. பிரிவு 4

0/L DAY CLASSES

பிரிவு 3

EVENING CLASSES

பிரிவு 1

PAPER CLASSES

(DAY & EVENING)

8-30 — 1-30   4-15 — 6-15

ஆரம்பம்: 30-09-1991

மு. குறிப்பு: (1) கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.
(2) தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து போதிக்கப்படுகிறது.

(சி-0534)